குமரி மாவட்டத்தில் கனிம வளங்களை எடுத்துச் செல்லும் கனரக வாகனங்களால் சாலை விபத்துகள் ஏற்படுவதைத் தடுக்க நடவடிக்கை தேவை!

வழிபாட்டுத் தலங்கள் கட்ட அனுமதி! பொதுவான வழிகாட்டு நெறிமுறை ஒன்றை வகுத்திடுவீர்!

சட்டப்பேரவையில் – மனோ தங்கராஜ் பேச்சு!

சென்னை, ஏப். 2- சட்டப்.பேரவையில், மானியக் கோரிக்கை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு பேசிய கழக உறுப்பினர் மனோ தங்கராஜ், "வழிபாட்டுத் தலங்கள் கட்டுவதில் Standard Geraling Procedure - அதாவது நிலையான வழிகாட்டு நடைமுறை ஒன்றினைப் பின்பற்ற வேண்டும்!" என்று வேண்டுகோள் விடுத்தார்.

சட்டப்பேரவையில் மனோ தங்கராஜ் பேசியதாவது:-

கன்னியாகுமரி மாவட்டம், கன்னியாகுமரி முக்கடலும் சங்கமிக்கும் இடத்தில் அமைந்திருக்கக்கூடிய வள்ளுவப் பெருந்தகையின் சிலையையும், விவேகானந்தர் பாறையையும் இணைக்கின்ற கண்ணாடி இழைப் பாலத்தை தந்த நமது முதலமைச்சர் அவர்களுக்கு, கன்னியாகுமரி மாவட்ட மக்களின் சார்பில் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழர்களின் வாழ்வியலில், நம்முடைய வாழ்வியல் மரபை வெளிப்படுத்துகின்ற ஒன்றுதான் திருக்குறள். அது உலகப் பொதுமறையாக ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது. வள்ளுவன், 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' என்று தமிழனுடைய அந்த வாழ்வியலை மிக அற்புதமாகச் சொல்லியிருக்கிறார்.

அதேபோன்றுதான், விவேகானந்தர் அவர்களும், நான் முற்பிறவியில் செய்த பாவங்களுக்காக இப்போது என்மீது சுமத்தப்பட்டிருக்கக்கூடிய விதி என்றிருந்த அந்த சாதிய கட்டமைப்புகளை உடைக்கின்ற விதத்தில், 'You are the creator of your own destiny' உன்னுடைய இலக்கை, உன்னுடைய விதியை தீர்மானிக்கிறவர் 'நீ தான்' என்று சொன்னவர் விவேகானந்தர் அவர்கள். ஆகவே, வள்ளுவ பெருந்தகையும், சுவாமி விவேகானந்தர் அவர்களும் ஒரு சமூகநீதி கருத்தை, பொதுவுடைமைக் கருத்தை, இந்த மூட நம்பிக்கைகளை ஒழிக்கின்ற ஓர் உயர்ந்த தத்துவத்தைத்தான் சொல்லியிருக்கிறார்கள். அந்த இரு பேராசான்களுக்கும், மத சாயம் ஊட்டி அவர்களை ஒரு குறுகிய வட்டத்திற்குள் கொண்டு வரலாம் என்று எண்ணிய சில மதவெறியர்களுடைய முயற்சியை தகர்க்கின்ற விதத்தில், அந்த இரு பேராசான்களின் ஒப்பற்றத் தத்துவதையும், அவர்களையும் இணைக்கின்ற விதத்தில் அந்தக் கண்ணாடி பாலம் அமைந்திருப்பது உண்மையிலேயே ஒரு மிகப்பெரிய முயற்சி என்றே நாம் கருதுகின்றோம். (மேசையைத் தட்டும் ஒலி)

வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த அவையில், வனம் மற்றும் சுற்றுச்சூழல், கால நிலை மாற்றம் குறித்து பேசுவதில் நான் பெரும கிழ்ச்சி அடைகின்றேன். எனது சொந்த ஊர் கன்னியாகுமரி மாவட்டம், கருங்கல் ஆகும். என்னுடைய தொகுதி இயற்கை எழில் கொஞ்சுகின்ற பத்மநாபபுரம். நான் சிறுவனாக இருக்கும்போது பனிக்கட்டி மழைபொழிவதைப் பார்த்திருக்கிறேன். குளிர்காலத்தில் அடர்ந்த பனிப் பொழிவைப் பார்த்திருக்கிறேன். தென்மேற்கு பருவ மழை, வடகிழக்கு பருவ மழை, கோடை மழை என பருவம் தவறாத மழையைத் தொடர்ந்து பார்த்திருக்கிறேன். தடுக்கி விழந்தால் தாமரைத் தடாகங்கள். அதுபோன்று, கண்ணுக்கு எட்டாத தொலைவிற்கு வயல்வெளியையும் பார்த்திருக்கிறேன். அடர்ந்த காடுகளையும், கண்கொள்ளாக் காட்சியாய் பார்த்திருக்கிறேன். எத்தனையோ வகை மிருகங்கள், எண்ணிலடங்கா பறவை இனங்கள், விதவிதமான வண்ணத்துப் பூச்சிகள், தட்டான் பூச்சிகள் என்று வர்ணிக்க வார்த்தைகள் இல்லை. இன்றைக்கு, இவற்றை காண இயலவில்லை.

மாற்று வழிகள்!

இதற்குக் காரணம், அதிதீவிர நகரமயமாக்கல், புவி வெப்பமயமாதல் அது சார்ந்து ஏற்பட்டிருக்கும் காலநிலை மாற்றம் தான் என்பதை நாம் அனைவரும் அறிந்திருக்கிறோம். இதனால், பல தருணங்களில் எதிர்பாராத நேரங்களில், பேரிடர்களை நாம் எதிர்கொள்ள நேரிடுகிறது. எனவே, இவற்றுக்கு நாம் மாற்று வழிகளை சிந்திக்க வேண்டிய ஒரு காலக்கட்டத்தில் இருந்துகொண்டிருக்கின்றோம். இன்றைக்கு, நம்முடைய தமிழகத்தைப் பொறுத்தவரையில், பாசனப் பகுதிகள் நிறைந்த பகுதி.

ஒரு பாசனப் பகுதியை எடுத்துக்கொண்டால், அதற்கு இருக்கக்கூடிய அந்த நீராதாரம், அதனுடைய கட்டமைப்பு கால்வாய்கள் போன்றவை இருக்கும்வரை அதை விவசாயம் செய்யமுடியாத பகுதி என்று நாம் எண்ணிவிடமுடியாது. முக்கனிகளும் நிறைந்த கன்னியாகுமரி மாவட்டத்தில், ஒரு காலக்கட்டத்தில் 1 இலட்சத்து 5 ஆயிரம் ஏக்கர் நிலத்தில் நெல் விளைந்திருக்கிறது. எனவேதான், அதை நாஞ்சில் நாடு, தென்தமிழ்நாட்டின் நெற்களஞ்சியம் என்று வரலாற்றில் அழைக்கப்பட்டிருக்கிறது. அது படிப்படியாகக் குறைந்து இன்றைக்கு விவசாயம் வெறும் 3 ஆயிரம் ஏக்கர் நிலத்தில் தான் நெல் சாகுபடி என்கின்ற நிலைக்கு வந்திருக்கிறது என்பதை நம்மையெல்லாம் எண்ணிப் பார்க்க வைத்திருக்கிறது.

எனவே, விவசாயம் மற்றும் விளைநிலங்கள், ஈர நிலங்கள் ஆகியவற்றை பாதுகாக்க ஒரு சிறப்பு Land Use Policy கொண்டு வர வேண்டுமென்ற ஒரு கோரிக்கையினை நான் இந்த அவைமுன் வைக்க கடமைப்பட்டிருக்கின்றேன். சாதரணமாக, நம்முடைய நிலங்களில் வீடுகளைக் கட்டுகிறார்கள். அது தவிர்க்கமுடியாத ஒன்றுதான். ஆனால், அந்த land பார்க்கும் போது, முறையான தண்ணீர் வசதி இருக்கக்கூடிய நிலத்தை எந்தச் சூழ்நிலையிலும், uncultivable land என்று சொல்லமுடியாது. அது uncultivated land. அதை cultivate செய்யவில்லை அவ்வளவுதான். ஆனால், ஓராண்டு இரண்டாண்டு காலம் பயிர் போடாமல் இருந்துவிட்டு, அது uncultivable என்று சொல்கின்ற நேரத்தில், அவற்றை எளிதாக வகைமாற்றம் செய்வதற்கு ஒரு வாய்ப்பாக அமைந்துவிடுகிறது. எனவே, நீராதாரங்கள் இருக்கும் என்றுசொன்னால், அந்த நிலங்களை எந்த சூழ்நிலை யிலும் uncultivable என்று மாற்றக்கூடாது என்கின்ற ஒன்றை நம்முடைய கொள்கையிலே சேர்க்கவேண்டுமென்ற கோரிக்கையையும் நான் இந்த அவைமுன் வைக்க கடமைப்பட்டிருக்கின்றேன்.

மேற்குத் தொடர்ச்சி மலை பல்லுயிர் பெருக்கம்!

அடுத்ததாக, மேற்குத் தொடர்ச்சி மலை. மேற்குத் தொடர்ச்சி மலை பல்லுயிர் பெருக்கத்திற்கு ஒரு முக்கியமான பகுதி. அது ஒரு Biological hotspot என்று நாம் சொல்கிறோம். மேற்குத் தொடர்ச்சி மற்றும் அதனை சார்ந்த மலைத் தொடர்கள்தான் இயற்கை வரப்பிரசாதமாக தமிழ்நாட்டிற்கு தண்ணீர் தேவைகளையும் பூர்த்தி செய்கின்ற அருங்கொடையாக உள்ளது. அவற்றை பாதுகாக்க வேண்டிய கடமை நமக்கு இருக்கிறது. எனவே, மேற்குத் தொடர்ச்சி மலை பாதுகாப்பிற்காக ஒரு சிறப்புத் திட்டத்தை, கொள்கையை வகுக்கவும் நான் இந்த மாமன்றத்தில் கோரிக்கையாக வைக்கின்றேன்.

மக்கள்தொகை மிகப் பெரிய அளவில் வளர்ந்து வருகிறது. ஒரு பக்கத்தில் ஒன்றிய அரசு மக்கள்தொகையை குறைத்து நம்முடைய மாநிலத்திற்கு பல்வேறு சோதனைகளை, நெருக்கடிகளை தண்டனை தருவது போன்று தந்துகொண்டிருக்கிறார்கள். மறுபுறத்தில் இந்தியாவின் மக்கள்தொகை பெரிய அளவிற்கு வந்துகொண்டிருக்கிறது. மக்கள் தொகைக்கேற்றவாறு நாம் புதிய தொழில்நுட்பங்களையும், வியூகங்களையும் பயன்படுத்தி, கொள்கை திட்டங்களை வகுத்து, அதற்கு ஏற்றபடி, நம்முடைய முன்னேற்றத்திற்கான வழிகளை வகுக்கவில்லையென்று சொன்னால், எதிர்காலத்தில் சுற்றுப்புற சூழலுக்கு மிகப் பெரிய சவாலாக அமைந்துவிடும். குடியிருப்புக்காக வயல்கள் மற்றும் ஈர நிலங்கள், சதுப்பு நிலங்கள் போன்றவற்றை வகை மாற்றம் செய்வது இன்றைக்கு அதிகரித்து வருகிறது. இதனால்தான் இப்படிப்பட்ட நிலப்பரப்புகள் நாளுக்குநாள் குறைந்து கொண்டு வருகிறது.

எனவே, பெருகி வருகின்ற வீடுகளின் தேவைகளை நாம் கணக்கில் கொண்டு, vertical development என்று சொல்வோம், செங்குத்தான வளர்ச்சி. அதுதான் இன்றைய காலக் கட்டத்திற்கு உகந்ததாக இருக்கும். எனவே, அப்படிப்பட்ட வளர்ச்சிதான் தீர்வு என்பதை நாம் கருத்தில்கொண்டு, தனி, தனி வீடுகள் என்பதை மாற்றிவிட்டு, அடுக்குமாடி என்ற நிலைக்குச் செல்ல வேண்டும். கன்னியாகுமரி மாவட்டத்தில் முதன்முறையாக நாங்கள் ஊரக

வளர்ச்சித் துறையின் மூலமாகக்கூட கட்டுகின்ற ஒரு கட்டடத்தை அடுக்குமாடி குடியிருப்பாக கட்ட வேண்டுமென்று முயற்சிகளை மேற்கொண்டோம். ஒருசில காரணங்களால் அது தடைப்பட்டிருக்கிறது. இப்போதே அந்த நிலைக்கு சென்றால்தான் வருகின்ற காலக்கட்டங்களிலே மக்கள் தொகைக் கேற்ற குடியிருப்புகளை கட்டுகின்ற ஒரு சூழலை சந்திக்க முடியும்.

கனிம வளப் பொருட்கள் தட்டுப்பாடு!

அதேபோன்று கனிமவளப் பொருட்கள். அதனுடைய பயன்பாடு இந்த அளவிற்கு சென்று கொண்டிருந்தால், வெகுவிரைவில் அதற்கு தட்டுப்பாட்டை சந்திக்க நேரிடும் என்பதை நாம் அறிந்திருக்கின்றோம். எனவே, அவற்றிற்கும் மாற்று வழிகளை பார்க்க வேண்டும். இப்போது கனிமவளப் பொருட்களை வைத்து சாலை அமைத்தால் 5 ஆண்டுக்காலம் அதற்கு ஆயுள் நிர்ணயிக்கின்றோம். அதிலும், கன்னியாகுமரி போன்ற மழை பொழிகின்ற மாவட்டங்களில் ஓரிரண்டு ஆண்டுகள் தாக்குப்பிடிப்பதே கஷ்டம். எனவே, இப்படியே போய்க்கொண்டிருந்தோம் என்றால், அது ஒரு பெரிய சவாலாக அமையும். காரணம், தமிழ்நாட்டில் மட்டும் 2 இலட்சத்து 71 ஆயிரம் கிலோ மீட்டருக்கு சாலைகள் உள்ளன. இதில், 7 மீட்டர் அகலமுடைய ஒரு கிலோ மீட்டர் சாலைக்கு மேலடுக்கு மட்டும் சீரமைக்க சுமார் 1,400 டன் கனிமவளப் பொருட்கள் தேவைப்படுகின்றன. அப்படியானால், 2 இலட்சத்து 71 ஆயிரம் கிலோ மீட்டர் தொலைவிற்குள்ள சாலைகளை தொடர்ந்து சீரமைப்பதற்கு எவ்வளவு கனிமவளப் பொருட்கள் தேவை? இவற்றை நாம் எப்படி எதிர்காலத்தில் சந்திக்க முடியும்?

இதுபோன்று, கடற்கரையில் கொட்டப்படுகின்ற பெரிய கற்கள் அவற்றுக்குச் செலவிடுகின்ற தேவைகள் இவற்றையெல்லாம் கருத்தில்கொண்டு, புதிய தொழில்நுட்பங்களை கண்டுபிடிக்க நாம் அதற்கான வழிமுறைகளை கண்டுபிடிக்க வேண்டுமென்ற கோரிக்கையை நான் இந்த மாமன்றத்தில் வைக்கின்றேன். Cost effective technology, durable technology போன்றவற்றையெல்லாம் நாம் இன்னும் அதிகமாக கண்டுபிடிப்பதற்கான முயற்சிகளில் ஈடுபட வேண்டும்.

கழிவுநீர் கலப்பு பிரச்சினை!

நீர் ஆதாரங்களைப் பொறுத்தவரையில், கழிவு நீர் கலப்பு மிகப் பெரிய பிரச்சினை. குறிப்பாக வீடுகளிலிருந்து செல்கின்ற கழிவுநீர். கழிவுநீர் கலப்பை கட்டுப்படுத்த, நாம் பல்வேறு திட்டங்களைக் கொண்டு வந்தாலும், சாதாரணமாக கிராமப்புறங்களில் town panchayat, village panchayatsல், வீடுகளின் கழிவு நீரை, மழைநீர் வடிகால் storm water drainல் விட்டுவிடுகிறார்கள். Storm water drain மழை நீர் வடிகாலில் வீடுகளின் கழிவுநீரை விடக்கூடாது. அனைத்து வீடுகளிலும் உறிஞ்சு குழிகள் முறையாக அமைக்கப்பட வேண்டும். அதை கன்னியாகுமரி மாவட்டத்தில் 60 சதவிகித வீடுகளுக்குமேல் செய்திருக்கிறோம். அதுபோன்று வீடுகளிலிருந்து கிடைக்கக் கூடிய திடக்கழிவுகளை மேலாண்மை செய்வதற்கு, வீடுகளிலேயே அவற்றைப் பிரிப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

அதுமட்டுமல்ல, அதில் degradable waste அவற்றை pipe composting என்கின்ற முறையில் மிக எளிதாக கையாள முடியும். Pipe composting முறையில் அதை செய்தால் அனைத்து வீடுகளிலும் மிகக் குறைந்த செலவில் செய்ய முடியும். அது waste generation-ஐக் குறைக்கும். இன்னொன்று, ewaste, plastic wasteஐ மட்டும் segregate செய்து பஞ்சாயத்துக்கு கொடுத்தால் போதும், அது Waste to wealth என்று சொல்கிறோம். அது பயனுள்ளதாக அமையும். பஞ்சாயத்துகளில் அதை கையாள்வதற்கு மிக எளிதாக இருக்கும்.

கடல்நீர் மட்டம் இன்றைக்கு சுற்றுச்சூழல் பிரச்சினையினால், காலநிலை மாற்றத்தினால் உயர்ந்து கொண்டிருக்கிறது. 100 சென்டி மீட்டர் கடல் மட்டம் உயர்ந்தால் அது இந்தியாவில் 1,500 சதுர கி.மீ. பரப்பளவில் உள்ள பகுதிகள் கடலில் சென்றுவிடும் என்கின்ற ஒரு எச்சரிக்கையை விஞ்ஞானிகள் நமக்கு தெரிவித்திருக்கின்றார்கள். இன்றைக்கு பார்த்தீர்களென்றால் பல இடங்களில் கடந்த 30 ஆண்டுகளாக கடற்கரையில் அமைக்கப்பட்டு வருகின்ற கடல் அரிப்புத் தடுப்புச் சுவர்கள் பல சூழியல் தாக்கங்களை உருவாக்குவதால் அமைக்கப்படுகிறது.

இது சம்பந்தமாக ஒரு முறையான மீளாய்வு தேவைப்படுவதோடு, நிலைத்த, நீடித்த வளர்ச்சியைக் கருத்தில்கொண்டு கடலோரப் பகுதி மக்களின் குடியிருப்புகள் மற்றும் வாழ்வாதாரத்திற்கு நிரந்தரத் தீர்வு காணப்பட வேண்டிய அவசியம் வந்துள்ளது. கன்னியாகுமரி மாவட்டம், நீரோடி தொடங்கி ஆரோக்கியபுரம் வரை இருக்கக்கூடிய 72 கி.மீ. கடற்கரையில் 48 கடற்கரை கிராமங்கள் இருக்கின்றன. இந்தக் கடற்கரையிலே 100 மீட்டர் அளவில் வலை விரிப்புக் காணி என்று ஒரு இடம் இருக்கும். அந்த வலைகளை எல்லாம் விரித்துவிட்டு பயன்படுத்தக்கூடிய இடம் அது. இன்றைக்கு பல ஊர்களில் அந்த இடம் இல்லை, கடலுக்குள் சென்றுவிட்டது.

அதேபோன்று, தொடர்ந்து இந்த குடியிருப்புகள், பல ஊர்கள் எனக்கு நேரடியாகத் தெரியும். 5, 6 அடுக்கு வீடுகள் இருந்த இடம் இப்போது கடலுக்குள் சென்றுவிட்டது.

குறிப்பாக சொன்னால் தேங்காய்பட்டணம் அருகிலிருந்த அரையான் தோப்பு, வல்லவிளை பகுதியிலிருந்த எடப்பாடு போன்ற கிராமங்கள் உண்மையிலேயே முற்றிலுமாக இல்லை. அது தண்ணீருக்குள் சென்றுவிட்டது. அதேபோன்று, பிள்ளை தோப்பு, அலிக்கால் போன்ற பல கிராமங்கள் தொடர்ந்து சிரமங்களை சந்தித்து வருகின்றன. சாலைகள், மின் கம்பங்கள் எல்லாம் முற்றிலுமாக கடலுக்குள் சென்ற சம்பவத்தை நாம் நேரடியாகவே பார்க்க முடியும்.

எனவே, இந்த மீனவர்கள் குடியிருக்க கடலரிப்பு ஏற்படாத பாதுகாப்பான கடற்கரைப் பகுதிகள் அனைத்து வசதிகளும் உள்ளடக்கிய பாதுகாப்பான பகுதியில் இதேபோன்று அடுக்குமாடி குடியிருப்புகளைக் கட்டி அங்கு அவர்களுக்கு அனைத்து வசதிகளையும் செய்துவிட்டோம் என்றால், கடற்கரை ஒட்டி இருக்கிற வீட்டை வைத்துத்தான் அவர்கள் கஷ்டப்படவே முடியும். Groynes அமைப்பதற்கும், கடலரிப்புத் தடுப்புச் சுவர் கட்டுவதற்கும் பதிலாக முக்கியமான இடங்களைத் தேர்வு செய்து அந்த இடங்களில் 2,3 ஊர்களுக்குச் சேர்த்து மீன் பிடித் தளங்களையும், சிறிய மீன்பிடித் துறைமுகங்களையும் கட்டினோம் என்றால் இந்தப் பிரச்சினையை solve செய்ய முடியும் என்பது என்னுடைய கருத்து.

அதேபோன்று, நீர்நிலைகள், நீர் வழித் தடங்கள் நாளுக்குநாள் குறைந்துகொண்டே வருகிறது. இதில் உள்ளாட்சி அமைப்புகளும் பெரும் பங்காற்றுகிறது. சாலைகள் அமைத்து, எனவே, அவற்றையெல்லாம் நாம் ஒரு survey செய்து அந்த இடங்களை அடையாளப்படுத்த வேண்டும். எந்த வழியிலும் ஊராட்சி அமைப்புகள் அதை எடுத்துச்செல்லக்கூடிய சூழல் வரக்கூடாது. இப்போது இன்னொரு புதிய culture உருவாகி இருக்கிறது. அனைத்து குளங்களில் உள்ள கரைகளையும் இப்போது paver block அமைத்து நாம் அலங்கரிக்கிறோம். அது பார்ப்பதற்கு அழகாக இருக்கிறது. ஆனால், ஒவ்வொரு குளத்தினுடைய கரைக்கும், ஒரு eco system இருக்கிறது. அந்த சூழியல் அழிந்துவிடக்கூடாது. அதில் நிறைய herbs, plants, பறவைகள் வந்து செல்கிறது. எனவே, நிச்சயமாக அதையும் நாம் சரிசெய்ய வேண்டுமென்ற கோரிக்கையை நான் வைக்கின்றேன்.

அதாவது, கரியமில வாயு உமிழ்தலில் இந்தியா மூன்றாவது இடத்தில் இருக்கிறது. அதேபோன்று, காடுகள் அழிப்பில் இன்றைக்கு இரண்டாவது இடத்தில் இருக்கிறது. இது நம்முடைய ஒன்றிய அரசை எடுத்துக்கொண்டோம் என்றால், அவர்கள் இதில் ரொம்ப கவனம் செலுத்துகிற மாதிரி தெரியவில்லை. காரணம், அவர்கள் ஆட்சி பொறுப்பேற்ற 2014 லிருந்து இதுவரையிலும் உள்ள காலக்கட்டத்தில் சுமார் 3 இலட்சத்திற்கும் மேற்பட்ட ஹெக்டேர் நிலங்கள், காடுகளை பல்வேறு காரணங்களுக்காக மாற்றி பயன்படுத்தி இருக்கின்றார்கள். அதேபோன்று, Environmental Impact Assessmentல் ஒரு திருத்தத்தைக் கொண்டு வர முயற்சி செய்தார்கள்.

கடும் எதிர்ப்பின் காரணமாக அது நிலுவையில் வைக்கப்பட்டிருக்கிறது. அதுபோன்ற முயற்சிகளை ஒன்றிய அரசு எடுப்பதை எந்தவிதத்திலும் நாம் ஏற்றுக்கொள்ள முடியாது. முதல்வர் அவர்கள், அவர்கள் கொண்டுவரக்கூடிய ஒவ்வொரு திட்டத்திலும் இருக்கக்கூடிய சாதக, பாதகங்களை தைரியமாக எடுத்துப் பேசக்கூடிய ஒரு ஆற்றல்மிக்க தலைவராக இருக்கின்றார்கள். அந்தப் பணியை நாம் தொடர்ந்து செய்ய வேண்டும்.

நீடித்த, நிலைத்த வளர்ச்சி இலக்குகளை எட்டுவதில் தமிழ்நாடு சாதனை படைத்து வருகிறது, அது பாராட்டப்படக்கூடிய ஒன்று. இன்றைக்கு காற்றின் தரம், நீர் மேலாண்மை, பல்லுயிர் பெருக்கம், காலநிலை மாற்றத் தாக்கத் தணிக்கை நடவடிக்கை உள்ளிட்ட சுற்றுச்சூழல் செயல்திறன் குறியீட்டில்கூட நாம் உயர்ந்த இடத்தில் நாம் இருக்கிறோம். இதெல்லாம் தமிழ்நாட்டிற்கான பாராட்டுகள்.

அது மட்டுமல்ல, நீலகிரி வரையாடுத் திட்டம், Green Tamil Nadu Mission, Endangered Species Conservation Fund, Dhanushkodi Greater Flamingo Sanctuary, Tamil Nadu Climate Change Mission போன்ற அதிக அளவிலான திட்டங்களை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தந்திருக்கிறார்கள். அது மட்டுமல்ல, எங்களுடைய மாவட்டத்தில் இருக்கக்கூடிய சுசீந்திரம்தேரூர் wetland area, .

குறுகிய சாலைகளில் அதிகனரக வாகனங்கள்!

அந்த wetland areaவை, Ramsar sites எங்களுக்கு தலைவர் அவர்கள் அறிவித்தார்கள். அதற்கும் என்னுடைய கோரிக்கையை ஏற்று Ramsar sites சுசீந்திரம் தேரூர் wetland areaவுடன் சேர்த்தமைக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். கடைசியாக இரண்டே இரண்டு கோரிக்கைகளை மட்டும் கூறி நிறைவு செய்கிறேன். கன்னியாகுமரி மாவட்டத்தில் நான்கு வழிச் சாலைப் பணிகள் இன்னும் முடியாத நிலையில் இருக்கின்றன. இந்தச் சூழ்நிலையில் மாவட்டத்தில் போக்குவரத்து நெரிசல் கொண்ட குறுகிய சாலைகள் வழியாக கேரள மாநிலத்திற்குக் கனிம வளங்கள், அதிகனரக வாகனங்களில் எடுத்துச் செல்வதில் உள்ளூர் மக்களுக்குப் பல்வேறு சிரமங்கள் ஏற்படுகின்றன. பல விபத்துகள் ஏற்படுகின்றன, சென்ற ஆண்டில் மட்டும் சாலை விபத்துகளில் 336 நபர்கள் மரணமடைந்துள்ளனர். இதுபோன்ற சவால்களைக் கட்டுப்படுத்த, கனிம வள உற்பத்தி, போக்குவரத்து போன்றவற்றைக் கணினிமயமாக்கி, epass முறையை நடைமுறைப்படுத்தவும், 10 சக்கரங்களுக்கு அதிகமான அதிகனரக வாகனங்கள் குறுகிய சாலைகளில் செல்வதைத் தடுக்கவும், நம்முடைய அரசு பல முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. அதற்கு நீதிமன்றம் சில தடைகளை விதித்திருக்கிறது. ஆனால், தடைகளை மாற்றிவிட்டு, மீண்டும் அதை நடைமுறைப்படுத்த வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

பத்மநாபபுரம் அரண்மனை கோட்டைச் சுவர்!

தொல்லியல் முக்கியத்துவம் வாய்ந்த பத்மநாபபுரம் அரண்மனையின் கோட்டைச் சுவர் மிகவும் பழுதடைந்து, பொதுமக்களின் உயிருக்கு ஆபத்து ஏற்படும் நிலையில் உள்ளது. பொதுப் பணித்துறையின் தொல்லியல் பிரிவின் கட்டுப்பாட்டின் கீழ் வருகின்ற இந்த பத்மநாபபுரம் கோட்டைச் சுவர், ஒரு பாரம்பரியம் மிக்கது. அது குறித்து பொதுவில் தவறாக பேசப்படுகிறது. எனவே, அதனை சரிசெய்வதற்கு கண்டிப்பாக நிதி ஒதுக்க வேண்டும்.

கடைசி கோரிக்கையாக, சிறுபான்மை சமூகத்தினரின் பிரச்சினை நீண்ட காலமாக இருந்துகொண்டிருக்கிறது. அனைவரும் பேசிக்கொண்டிருக்கிறார்கள். பொதுமக்கள் எங்களை எப்போதும் பின்தொடர்ந்துகொண்டிருக்கிறார்கள். பட்டா நிலங்களில் அவர்களது வழிபாட்டுத் தலங்களைக் கட்டும் நேரத்தில், யாராவது குறுக்கீடு செய்தால், அவர்களுக்கு NoC கிடைப்பதில் பல்வேறு சிக்கல்கள் ஏற்படுகின்றன. நான் அமைச்சர் பொறுப்பிலிருந்தபோது தலைமைச் செயலாளர் அவர்களைச் சந்தித்து, ஒரு Standard Operating Procedure, அது எந்த சமயமாக இருந்தாலும் சரி, அதை சமயம் சாராத வகையில், எந்த மதத்தின் வழிபாட்டுத் தலம் கட்டுவதாக இருந்தாலும், அதற்கென்று ஒரு SOP உருவாக்கினால், யாருக்கும் எந்தப் பிரச்சினையும் வராது. அவர்கள் பட்டா நிலங்களில் கட்டுவதற்கு தடைகள் வருகின்ற நேரத்தில் அவர்கள் நம்மை தவறாக பார்க்கக்கூடிய சூழல் வருகிறது. அதைத் தவிர்ப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும் என்று அன்பாக கேட்டுக்கொள்கிறேன். அவர்கள் அனைவரின் கோரிக்கையான அவர்கள் அடக்கம் செய்யக்கூடிய கல்லறைத் தோட்டங்களுக்கும், கபர்ஸ்தான்களுக்கும் அனைத்து மாவட்டங்களிலும் இட ஒதுக்கீடு செய்வதற்கு சிறப்பு முயற்சி எடுக்க வேண்டும்.

கடைசியாக, சமது சங்க இலக்கியங்களில், சிலப்பதிகாரம்நதியும் காடும் அழிந்ததேல், நாகரீகம் நிலைத்திருக்குமோசிலப்பதிகாரம், காடும் கான் வளமும் கெடினும், நாடும் நாடேடும் கெடும்பரிபாடல், வெள்வையில் காடு கொள்ளாது நெடுவேலி நிலம், வடிவல்லாது மலையினம் வாழும்புறநானூறு, கடைசியாக

"மணிநீரும் மண்ணும் மலையும் அணிநிழற் காடும் உடைய தரண்".

என்று திருக்குறளும் கூறியிருக்கிறது.

நம்முடைய முதல்வர் அவர்கள் தலைமையில் இருக்கக்கூடிய இந்த மகத்தான அரசு, அனைத்துத் துறைகளிலும் சிறந்து விளங்குவது போன்று, சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதில் இருக்கக்கூடிய காலநிலை மாற்றத்தைத் தடுப்பதிலும் அதற்கான தடுப்பு நடவடிக்கைகளை எடுப்பதிலும், நாம் இந்தியாவிற்கல்ல, உலகிற்கே முதல்வர்கள் என்று சொல்லக்கூடிய அளவிற்கு நம்முடைய பணிகளை மேற்கொள்ள வேண்டுமென்று கோரிக்கையை வைத்து, (மேசையைத் தட்டும் ஒலி) வாய்ப்பளித்த முதல்வர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொண்டு விடை பெறுகின்றேன்

இவ்வாறு மனோ தங்கராஜ் பேசினார்.

கழகத்தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு வடக்கு மாவட்ட தி.மு.க. 73 வது வார்டு பொன்னையராஜபுரம் பள்ளியில் இலவச மருத்துவ பரிசோதனை முகாம், கண் சிகிச்சை முகாம், இரத்த தான முகாம் ஆகியவற்றை வடக்கு மாவட்ட கழகச் செயலாளர் தொ.அ.ரவி துவக்கி வைத்தார். பின்னர் வட்ட துணை செயலாளர் ராஜேஸ்வரி, BLA 2 பசுவை நாகராஜ் உட்பட 5 பேர் உடல் உறுப்பு தானம் செய்தனர். தலைமைச் செயற்குழு உறுப்பினரும் கோவை மாநகராட்சி நகரமைப்பு குழு தலைவருமான சோமு(எ) த. சந்தோஷ் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் பகுதி செயலாளர் கார்த்திக் செல்வராஜ், துணை மேயர் வெற்றிசெல்வன், பரமசிவம் , உசேன், ஜெயந்தி, தியாகு உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

புனித ரமலான் திருநாளை முன்னிட்டு கோவை தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் கூலூர் பள்ளிவாசலில் கோவை தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் தளபதி முருகேசன் கலந்து கொண்டு 50க்கும் மேற்பட்ட ஏழை, எளிய முஸ்லிம் குடும்பங்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கி ரமலான் வாழ்த்துக்களை தெரிவித்தார். நிகழ்வில் கௌதமன், தேவி மன்னவன், கணேசு, ரகுதுரைராஜ் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.